சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி ஜெ.சுலக்ஷனா, த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு டி.ஜெயராமன்– இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசாணைக்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப் பிரிவுகளைத் தளர்த்தியும் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண்.88

நாள் : 18.11.2020
சார்வரி, கார்த்திகை 03,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடம்), மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கடித எண். பி(1)/ 1669/2019, நாள் 20.09.2019.
3. அரசாணை (நிலை)எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1)த் துறை, நாள் 23.01.2020.

-----

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித் துறையைச் சார்ந்த மெரினா உபகோட்டம், சென்னை அலுவலகத்தில் உதவியாளாக பணிபுரிந்து வந்த திரு டி.ஜெயராமன் கடந்த 06.09.2006 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர்/ இளைய மகள் திருமதி ஜெ.சுலக்ஷனா தனக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி 27.05.2008 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டதின் பேரில், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக திருமதி ஜெ.சுலக்ஷனா அவர்களுக்குப் பணி நியமனம் அளிக்கப்பட்டு, மதுரை மண்டலத்தைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மதுரையைச் சார்ந்த கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம் இராமநாதபுரம் அலுவலகத்தில் 29.08.2018 முற்பகல் முதல் பணியில் பணியாற்றி வருகிறார் என்றும் தெரிவித்து, பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 29.08.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடம்), மதுரை மண்டலம், அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடம்), மதுரை மண்டலம், மதுரை அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு ஆய்வு செய்யப்பட்டது. தனியர் திருமதி ஜெ.சுலக்ஷனா அவர்களின் தந்தை திரு டி.ஜெயராமன் 06.09.2006 அன்று பணியிலிருக்கும் போது காலமாகியுள்ளார். தனியரின் பிறந்த நாள் 16.02.1991 ஆகும். தனியரின் தந்தை இறந்தபோது அன்னாரின் வயது 15 ஆண்டுகள், 6 மாதங்கள் ஆகும். இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பினை மார்ச் 2006–இல் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசு ஊழியர் இறந்து மூன்று ஆண்டுகளுக்குள் 27.05.2008 அன்று தனக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரி தனியர் விண்ணப்பம் அளித்துள்ளார். விண்ணப்பம் அளித்த நாளன்று தனியர் 18 வயதினை நிறைவு செய்யவில்லை. தனியரின் விண்ணப்பம் ஏற்கப்பட்டு கருணை அடிப்படையில் தற்காலிக

இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டுள்ளது. இச்செயல் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(b) ஆகியவற்றிற்கு முரணானதாகும். எனவே, தனியாரின் பணியினை வரன்முறை செய்வதற்கு மேற்காணும் அரசாணைக்கு விலக்கும் மற்றும் மேற்காண் சட்டப்பிரிவுகளுக்குத் தளர்வும் அளிக்க வேண்டியுள்ளது. தனியர் தற்காலிக இளநிலை உதவியாளராக 29.08.2018 அன்று பணியில் சேரும் போது தனியரின் வயது 27 ஆண்டுகள், 7 மாதங்கள் ஆகும். இறந்த அரசு ஊழியர் திரு டி.ஜெயராமன் அவர்களின் மனைவி திருமதி. வள்ளி 16.05.1993 அன்று காலமாகியுள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், பொதுப்பணித்துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 29.08.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திருமதி ஜெ.சுலக்ஷனா என்பவரின் பணியினை அவர் அப்பதவியில் சேர்ந்த நாளான 29.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்திடவும் மற்றும் பணி நியமன நாளிலிருந்து பணப்பலன்கள் அளிக்கவும் ஏதுவாக, தனியர்பொருட்டு அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ.1)த்துறை, நாள் 23.01.2020–க்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–இல் பிரிவுகள் 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை அச்சட்டத்தின் பிரிவு 58–இன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தளர்வு செய்தும், கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித்துறையில், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனத்திற்குரிய உடற்தகுதிப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் திருமதி ஜெ.சுலக்ஷனா என்பவரின் பணியினை 29.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அ.சா.எண்.17850/ட்டி.1/ 2020–1, நாள் 09.11.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா.எண்.29541/ஜி1/ 2020–1, நாள் 11.11.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடம்), மதுரை மண்டலம், மதுரை–2.
திருமதி ஜெ.சுலக்ஷனா, இளநிலை உதவியாளர்,
(தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடம்), மதுரை மண்டலம், மதுரை–2 வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18.

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, சென்னை – 9.
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை–5.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்
24.11.20